
www.tamilarangam.net

# ஆகவே

தோன்றி வளர்ந்து சிதைந்து அழிந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்





இது ஆவேசமான தொடக்கம்
— அருந்ததி சபாநாதன் —

தனியே
— சண்முகம் சிவலிங்கம் —

தமிழில் ஒரு சிறுதிரைப்படம்
— சா. கந்தசாமி —

ருஷ்ய நாவல்
— மார்ட்டின் விக்ரமசிங்க —

உண்ணி
— வ. அ. இராசரெத்தினம் —

எம். ஏ. நுஃமானுக்கு ஒரு கடிதம்
— வியாபகன் —

நான்கு கவிதைகள்
— ஜபார் —

வேண்டுதல்
— கிறிஸ்டின் —




பிரமிப்பூட்டும் ஓர் இசைக்கலைஞர்
திருமலை பத்மநாதன்
— ஜபார் —

AAKAVE A TAMIL MAGAZINE SECOND CIRCULATION 12TH DECEMBER 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது ஆவேசமான தொடக்கம்....

'ஆகவேயின்' நவீன 'ஓவியம் பற்றிய குறிப்புகள்' என்ற கட்டுரையின் இறுதிப்பந்தியை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். 1986ன் பின் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையில் நடந்த ஓவியக் கண்காட்சிகளில் தமிழர்பங்கு பற்றியவற்றில் இந்த போர்காலப்பாதிப்புடன் ஓவியங்கள் வரவில்லை என்பது தவறான ஓர் கருத்து. '1986 – 1991 வரையில் நடந்த அனைத்து கண்காட்சிகளையும் பார்க்கும் வாய்ப்பு எனக்கு இருந்தமையால் என்னால் இதை நிருபித்துக்காட்ட முடியும், விடயத்தை பலப்படுத்த முன் ஓர் குறிப்பு. நான் குறிப்பிடப் போகும் ஓவியர்கள், அவர்கள் படைப்புகள். தரமற்றவை என நீங்கள் கருதினால் என் கருத்துக்களை காற்றோடு விட்டுவிடுங்கள். உங்களுக்கு பூரணசுதந்திரமுண்டு. 1986ன் யாழ்பல்கலைக்கழக கலாச்சாரக்குழு ஒழுங்கு செய்த கண்காட்சி அங்கு காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட ஓவியங்கள் நவீன பிரக்ஞை கொண்டவை. 'உடும்பன் குளம்' என்றோர் ஓவியம் நிர்மலா கோபாலசாமியினது - மண்டை ஓடுகளின் குவிப்பு. தரத்திலும் பின் நிற்கவில்லை மற்றுமோர், திகதி குறிப்பிடப்பட்ட ஓவியம். அந்த திகதியில் ஓர் படுகொலைச்சம்பவம் நடந்திருந்தது. இவை தவிர அகதிகள், அனாதைகள் என்ற தலைப்புக்களும் குண்டுவீச்சு சித்தரிப்புக்களும் ஓவியங்களாக்கப்பட்டவை. இவை பிரச்சார நோக்கற்றவை. இதற்குப் பிறகு அதே ஆண்டும் அடுத்த ஆண்டும் சில கண்காட்சிகள் நடைபெற்றன. அவற்றின் முக்கிய நோக்கு பிரச்சாரமாக இருந்தமையால் அதை விட்டுவிடுவோம். 89ல் நடைபெற்ற வாசுகி ஜெகநாதனின் ஓவியக்கண்காட்சியில் 2. 2. 89 என்ற தலைப்பில் ஓர் ஓவியம். மிகவும் தரமான படைப்பு. தற்போது வெளிநாட்டில் உள்ளது. 2 2. 89ல் இந்தியஇராணுவம் திருநெல்வேலி சந்தியில் யாழ்பல்கலைக்கழக மாணவரை சுட்டுக்கொன்றதை சித்தரிக்கும் ஓவியம் குறியீட்டுப்பாணியில் அமைந்திருந்தது.

1988ன் இறுதியில் யாழ்பல்கலைக்கழக பெண்கள் அமைப்பு ஒழுங்கு செய்த கண்காட்சியில் இடம் பெற்ற எனது படைப்பொன்று சிதைக்கப்பட்ட பெண்ணின் சிதைந்த உருவஅமைப்பில் வாயிலில் குந்தியிருக்கும் பெண் மெல்லிய மஞ்சள் மங்கல் ஓவியம். அவள் குந்தியிருக்கும் நிலைப்படியைச் சுற்றியுள்ள சுவரில் 'இந்தி' எழுத்துக்கள். இது அந்தக்கால நிகழ்வுகளின் பாதிப்பில் எழுந்த படைப்பு. இவ் ஓவியம் தற்போது Prof. சிவத்தம்பியின் அறையில் 'அழுது' கொண்டு இருக்கிறது ..

இப்படி இன்னும் பட்டியல் போடுவேன். இறுதியாக கடந்த வருடம் முதன்முதலாக இலங்கை இளம் சமகால ஓவியர்களின் கண்காட்சி ஒன்றை கொழும்பு ஜோர்ஜ் கீற் நிறுவனத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். அதில் நான் வாசுகி, வைதேகி ஆகிய மார்க்மாஸ்டரின் மூன்று மாணவியர் பங்குபற்றினோம். எனது படைப்பு ஒன்று "சிதைந்த கனவு" சிதைந்த மங்கலான விழி பிதுங்கிய முகங்கள். அவற்றை சூழ பனைமரங்கள். இது நான் யாழ்பாணத்தை விட்டு வெளியே வந்தபின் வரைந்தது. வாசுகியினது நெடுந்தூரம் சோர்ந்து நடக்கும் இழவி - தலையில் சுமை அகதியாக இருக்கலாம். வைதேகியினது கல்லறைகள், மெல்ல மொட்டு விடும் ஒரு செடி இதுவும் காலம் தூண்டிய படைப்புத்தான் இவை சிங்களவர் மத்தியில் பாராட்டுப் பெற்ற ஓவியங்கள் (ஆங்கில பத்திரிகை விமர்சனம் தேவைப்படின் அனுப்பிவைக்கலாம்) எனது படைப்பு விலைபோய்விட்டாலும் கூட, இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தரத்தில் இவை மிகவும் கீழ் நிற்கின்றன என்ற எண்ணத்தில் நீங்கள் இருந்து விடக்கூடாது என்பதற்காக இன்னும் நான் காரசாரமாக விவாதிக்க தயார் இருந்தாலும் கொஞ்சம் மெல்ல விஷயத்திற்கு வருகிறேன்.

இந்தக்காலத்தில் உண்மையான படைப்பாளியாக இருப்பதாயின் நிச்சயமாக எம்மைச்சூழ நிகழும் நிகழ்வுகளைத் தாங்கித்தான் படைப்புக்களும் வெளிவரும் - மனம் இங்கு முக்கியமானது. நான் கண்டியில் இருந்த போது என்னால் கண்டியின் அழகை ரசிக்கவேமுடியவில்லை "சிதைந்த கனவு" களைத்தான் காணமுடிந்தது இவைதவிர காட்சிக்கு கொண்டு வா விரும்பாத எத்தனையோ ஓவியங்கள் 'தலைமறைவாக்கப்பட்ட' நிலையிலும் உள்ளன இது அச்சமும், தப்பித்துக்கொள்ளும் மனநிலையின் காரணமாகவும் இருக்கலாம். இருந்தாலும் நான் இன்னொரு "முறிந்தபனைராஜினி"யாக விரும்பவில்லை. இதே நிலையில் வேறு படைப்பாளிகளும் இருக்கலாம் எமக்கு காலம் வழிவிடும் - இன்னும் நாற்பதோ ஐம்பதோ ஏன் இன்னும் சில ஆண்டுகள் போனபின் இவை வெளிவரத்தான் போகின்றன திட்டவட்டமாக நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள் இக்காலத்தில் ஓவியர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று. தமிழர் மத்தியில் ஓவியம் என்ற விடயம்பற்றி பேசுவோமாயின் ஆரம்பகாரரான கனகசபாபதி M. S. கந்தையா இராசையா, கனகசபை என்று ஓர் பட்டியல் நீட்டலாம் இவர்களின் படைப்புக்கள் மிக தரமானவை தத்ரூபபாணியாக இருந்தாலும் நவீனத்தின் தாக்கத்துடன் வெளிவந்தவை. இவர்களின் படைப்புக்கள் முதல், மார்க்மாஸ்டரின் மாணவர்களின் படைப்புக்கள்வரை ஒரு தொகுதியாக சேர்ந்த கண்காட்சி 1989ன் இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மேற்குறிப்பிட்ட பழைய ஓவியர்களின் படைப்புக்கள் சில 2ம் உலகயுத்த காலத்தை பிரதிபலிப்பதாக படைக்கப்பட்டிருந்தன உதாரணமாக Blackoutஎன்ற S. R. K யின் படைப்பு வீடுகளின் சாளரங்கள் கறுப்புத்தாள் ஒட்டப்பட்டதை சித்தரித்து காட்டுவதாக இந்த ஓவியம் அமைந்திருந்தது இது அந்தக் காலத்தை எடுத்துக்கூறும் ஓவியம். இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், சமகாலத்திற்கு கொஞ்சம் பொறுமைவேண்டும். எங்களின்உயிர் பெறுமதியான தாக இல்லாது போனாலும் 'அவசரம்' என்பது "வீணாக்கி விட்டுவிடும் எல்லாத்தையும் இது எனது அபிப்பிராயம்

☐ *அருந்ததி சபாநாதன்*

www.tamilarangam.net

# த னி யே

கனவு கண்ட விழிப்பில் கூட
உன் நினைவு துணுக்குற்றது.
நித்திரை மயக்கத்தின்
கறுப்பு நிறப் புகாரிலும்
உன் நினைவு தைத்தது.

இரவு கண்ட கனவை
எந்த பிசாசு சப்பித் துப்பியதோ?
பொட்டுப் பொட்டாக,
சுள்ளி சுள்ளியாக,
என்னுள் இருந்ததை யாரோ
ஒடித்துப் போட்டதாக ஒரு கும்மிருட்டு.

கும்மிருட்டில் ஒரு கோடு போல் நான்.
வைக்கோல் இழைப்பின்
முள்ளிக் காய்கள் இரண்டு
என்னுள் இருந்து
இருட்டுக்குள் எனது
விலாப்புறமாக வீழ்ந்தது போல்......
அசுத்தமான ஆவி ஒன்று
என்னை கழற்றத் தொடங்கியது போல்......

நான் உன்னை இழந்ததால்தான் இது என்ற
அச்சம் மீ தூர
சிலுவை போட்டுக் கொண்டே
தலையணையை இருளில் தள்ளிக்கிடத்தி
அவளோடு நெருங்கிக் கொள்கிறேன்-
அதுவும் போதவில்லை,
அவளைத் தொட்டுக் கொண்டே
நான் ஸ்த்திரமாகி
உறங்கிப் போனேன்,
கைவிடப் பட்ட உன் நினைவுக்குள்.

*அதிகாலை 260892*

☐ *சண்முகம் சிவலிங்கம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழில் ஒரு சிறுதிரைப்படம்

சினிமா என்றால் இரண்டு மணி நேரம் ஓடவேண்டும். கதை வேண்டும். வசனம் வேண்டும். இசை வேண்டும். பெரிய பெரிய நடிகை – நடிகர்கள் வேண்டும். அழகு கொஞ்சும் இடங்கள் வேண்டும். என் பதையெல்லாம் உதறி விட்டுவிட்டு, சிறுகதையைப் போல வாழ்க்கையை நறுக்கென்று சுட்டிக்காட்டும் சிறு படங்கள் வர ஆரம்பித்து விட்டன. அதில் 'தமிழில் முதல் முயற்சி' என்ற பிரகடனத்தோடு வந்திருப்பது எடிட்டர் பி. லெனினின் 'நாக் - அவுட்'. இந்தச் சிறு படம் பதினேழு நிமிடங்கள் ஓடும் கதைப்படம். ஆனால், படம் முடிந்ததும் ஏதோ பெரிய படத்தைப் பார்த்து அனுபவித்தது மாதிரி பிரமை உண்டாகிறது.

புதிய முயற்சியை வெற்றிகரமாக முடித்திருக்கும் லெனின்தான் 'நாக் அவுட்' படத்துக்குக் கதை, திரைக்கதை, டைக்ஷன் மற்றும் எடிட்டிங். கிட்டத்தட்ட படம் முழுவதிலும் எளிமையும் ஆளுமையும் ஆட்சி செலுத்துகிறது. வசனம், பாட்டு, காட்சி எல்லாவற்றையும் செட்டாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

'நாக் அவுட்' கதைதான் என்ன?

சிரஞ்சீவி ஒரு குத்துச்சண்டை வீரன். பல பரிசுகளையும் ஏராளமான விருதுகளையும் பெற்றவன். வாழ்க்கையின் நெருக்கடியில் எப்படியோ சிக்கி உருக்குலைந்து, அநாதையாகச் செத்துப்போகிறான். சாகடித்த மீன் விற்கும் பகுதியில் செத்துக் கிடக்கும் அவனை, யாரோ ஒருவன் சாலையில் போவோர் வருவோரிடம் எல்லாம் காசு வசூல் பண்ணி, குதிரை வண்டி பிடித்துச் சுடுகாட்டுக்குக் கொண்டு வருகிறான். கொஞ்சம் காசையும், புட்டிச் சாராயத்தையும் கொடுத்து அநாதைப் பிணத்தைப் புதைக்கச் சொல்கிறான். வெட்டியான் பிணத்தைப் பார்க்கிறான். குத்துச்சண்டை வீரன் உபகரணங்களெல்லாம் இருக்கிறது. எடுத்தெறிந்து விட்டு பிணத்தைத் தள்ளுகிறான் பட்டுவேட்டி தெரிகிறது. அதை உருவிக்கொண்டு மண்ணைத் தள்ளப்போகிறான். அரைஞாண் கொடியில் அவன் பெற்ற ஒரு விருது! அதையும் எடுத்துக் கொள்கிறான். பிறகு மண்ணைப் போட்டு மூடுகிறான். கொஞ்ச நாட்கள் போகின்றன. ஒருவன் சிரஞ்சீவியைப் புதைத்த இடத்தில் ஒரு பெயர்ப்பலகை நடுகிறான். இன்னும் சில ஆண்டுகள் செல்கின்றன. அந்த இடம் ஆடு, மாடு, மனிதர்கள் மலம் கழிக்கும் இடமாகிப் போகிறது. அவனைப் புதைத்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் ஒரு நினைவு மண்டபம் கட்டி, அவனை போற்றி புகழ ஆரம்பிக்கிறார்கள்.

இப்படி நவீன வாழ்க்கையின் அபத்தமான காரியங்கள் எத்தனை ஆழமாக நடைபெறுகிறது என்பதை வெகுநுட்பமாக, ஒரு விதமான விமரிசனத் தொனியோடு சொல்கிறது 'நாக் அவுட்'!. பி. லெனினுடன் ஒரு சின்ன பேட்டி ..

○ *''நாக் - அவுட்'' எடுக்கக் காரணம் என்ன?''*

தமிழ் சினிமாவில் எல்லாம் இருக்கிறது. ஆனால், நல்ல சினிமாதான் இல்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. அதோடு, நல்ல சினிமாவை மக்கள் பார்க்கமாட்டார்கள், ரசிக்கமாட்டார்கள் என்றும் சொல்கிறார்கள் எனக்கு அப்படித் தோன்றவில்லை. நல்ல சினிமாவைக்கொடுத்தால் மக்கள் ரசிப்பார்கள் அதை எங்கே இருந்து ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த போது, செய்தித்தாளில் சிரஞ்சீவி கதை கிடைத்தது. சின்ன வயதில் நானே ஒரு குத்துச்சண்டை வீரன். அதனால் உடனடியாக சிரஞ்சீவி கதையைச் சின்னப் படமாக எடுக்க ஆரம்பித்தோம்.

○ *''கறுப்பு - வெள்ளையில் எடுக்கக் காரணம்?''*

''சினிமா என்றால் மிகைப்படுத்தப்பட்டது. அழகு ஜொலிப்பது என்ற அபிப்பிராயம் வந்துவிடக்கூடாது என்பதுதான். கலரில் என்ன பண்ணினாலும் - சாவில்கூட ஒரு விதமான அழகு கூடிவிடுகிறது. நிஜத்தை நிஜமாகச் சொல்ல, கறுப்பு - வெள்ளையே போதும் என்று பட்டது. ஆனால், கடைசியில் மணிமண்டபம் கட்டி அழகேற்றுகிறார்கள் என்பதற்காக அந்தப் பகுதியை மட்டும் கலரில் எடுத்தோம்...''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○ "பிணத்தை எப்படி நடிக்க வைத்தீர்கள்?"

"ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு பிணத்தை எடுத்து வந்து நடிக்க வைப்பதாகத்தான் முதலில் இருந்தோம். ஆனால் நடிகர் சத்தியேந்திரன் பிணமாக நடிக்க சந்தோஷமாக முன்வந்தார். கண்ணைத் திறந்து கொண்டு பிணமாக நடிப்பது கஸ்டம் என்பதால், கண்ணை மூடிக்கொண்டு நடிக்கச்சொன்னேன். ஆனால், அவரோ கண்களைத் திறந்துகொண்டு மூஞ்சியெல்லாம் ஈ மொய்க்க... மெய்யாகவே பிணமாக நடித்தார். ஒரு இடத்தில் பிணம் கண் சிமிட்டுகிறது. என்றனர். ஃபிரேம் - பை - ஃபிரேமாகப் போட்டுப் பார்த்தேன். 'ஈ'தான் கண்ணுக்கு மேலாகப் பறக்கிறது. பிணம் கண்சிமிட்டவே இல்லை!"

○ "இசையமைப்பாளர்...?"

"சாவுக்கு மேளம் அடிக்கும் ஆட்கள்தான் படத்தின் இசையமைப்பாளர்கள்! சாவுக்குத் தாரை தப்பட்டை அடிப்பவர்களை நுங்கம்பாக்கத்திலிருந்து அழைத்துவந்தோம். அவர்களுக்கு 'நன்றி' கார்டு போட்டிருக்கலாம். ஆனால் மற்ற இசையமைப்பாளர்களை நான் கிண்டல் பண்ணுவதாக சொல்வார்கள் என்பதால் விட்டுவிட்டேன்...

○ "படம் எத்தனை நாட்களில் முடிந்தது?"

"படப்பிடிப்பு மூன்று நாட்கள். அப்புறம் எடிட்டிங்... மற்ற வேலைகள் எல்லாம் முடிய பத்துநாட்கள் பிடித்தன. மொத்தம் 2,300 அடிகள் எடுத்தோம். அதில் படத்தில் 1 700 அடிகள்தான் இருக்கின்றன.

○ "அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?"

இன்னும் இரண்டு, மூன்று சிறுபடங்கள் எடுக்கவேண்டும். அதை நான், மட்டும்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. நான் நல்ல, சீரியஸ் படத்தில் ஈடுபாடு கொண்டவர்களெல்லாம் எடுக்கவேண்டும் குறிப்பாக, ஃபிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்கள் இதில் ஈடுபாடு கொள்ளவேண்டும். இதனால் நல்ல சினிமாவுக்கான சூழல் ஏற்படும்"

□ சா. கந்தசாமி

நன்றி - ஆனந்தவிகடன் 18-10-1992

## அபிப்பிராயங்கள்

............சம்பிரதாயங்களிலிருந்து விடுபட்டு மாற்றங்களையும் புதுமையையும் விரும்பும் உங்கள் போக்கு ஆகவேயின் மூலம் புரிந்தது.

இலக்கிய கலைஞரின் கலைப்பரிமாணத்தை மேலும் அகலிக்கவுள்ள உங்கள் நாட்டத்தினை இதன் மூலம் தெரிந்து மகிழ்ச்சியடைகிறேன். சங்கீதம், நவீனஓவியம், நடனம், சினிமா அருகிப்போன சுதேசிய பிரதேச விளையாட்டுக்கள் பற்றியெல்லாம் ஆகவே மூலம் எமக்கு இன்னும் தெளிவான, தொடர்ச்சியான அறிவும் அனுபவமும் கிடைக்கவிருக்கிறது என்றே நம்புகிறேன். நாட்டுக்கூத்துப் பற்றியும் ஆகவேயில் நீங்கள் புலப்படுத்தியிருக்கும் பாணியில் சிலரைக் கொண்டு இங்கு எழுதப்பண்ணித்தரலாம்..........

சண்முகம் சிவலிங்கம் - பாண்டிருப்பு

..........அமைப்பு, விசயங்கள் எல்லாம் நன்று. இசை, நடனம், நாடகம், திரைப்படம் என்று எல்லா அம்சங்கள் பற்றியும் சிலபக்கங்களுக்குள் கூறி விட வேண்டும். என்று விரும்புகின்றீர்கள்- பக்க வரையறை. அதனால் நிறைவு தருவது சிரமம்.

தனித்தனியாக இல்லாமல் ஒரு மிடராவது பருகக்கூடியதாக சில விசயங்களைப் பற்றியாவது சற்று அதிகம் எழுதினால் என்ன?

எம். ஏ. நுஃமான் - பேராதனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ருஷ்ய நாவல்

''ருஷ்ய இலக்கியம் 9ம் நூற்றாண்டில் ஆரம்பமானது. எங்கள் கவனத்தை கவருகின்ற இரண்டாவது விசயம் எல்லா இலக்கியங்களையும் விட அது வயதில் மிக இளையதாக இருந்த போதிலும் ஒரு பக்குவ நிலையை எய்துதற்கு முதலே ஆத்மீகரீதியில் நன்கு முதிர்ந்திருந்தமையாகும். அதனுடைய பெருமையின் இரகசியமும் மனிதகுலத்திற்கு அது வழங்குகின்ற பெறுமதியின் மதிப்பும் இங்கேதான் புதைந்து கிடக்கிறது. இந்த ஆத்மீகமே துயரங்களில் எல்லாம் அநாதியானது, இதன் கண்ணீரே ஞானத்தில் மிக்கது.''

இந்த மேற்கோள் மௌரிஸ்பாரிங் An Out Line of Russion Literature என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஹேம்பல்கலைக்கழகநூல் நிலையம் வெளியிட்ட தொடர் வெளியீட்டில் இந்நூலும் அடங்கும். ஆசிரியர் மௌரிஸ்பாரிங் ருஷ்யமொழியிலும் இலக்கியத்திலும் பாண்டித்தியம் மிக்கவர். பிரிட்டனின் தூதுவராக ருஷ்யாவில் பணியாற்றி அந்நாட்டு மக்களை மிக நெருக்கமாக அறிந்தவர்.

ரஷ்யபுரட்சியும் அதன் விளைவாக முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையே மோதல்கள் நடந்த போதிலும் கூட ருஷ்ய இலக்கியம் பற்றிய குறிப்பாக நாவல்கள் - பற்றிய இம்மதிப்பீடு ஐரோப்பாவின் திறமை மிக்க விமர்சகர்களாலும் பெரிய நாவலாசிரியர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஹோமர், சேக்ஸ்பியர் போன்றவர்களின் பெருமைகளை ஆராய்ந்த பிரிஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோர்ச்டெய்னர் என்னும் ஆராய்ச்சி மாணவர் 1959ல் வெளியிட்ட நூலொன்றில் கூறுகிறார்: ருஷ்யாவில் 19ம் நூற்றாண்டில் மலர்ந்து மணம் கமழ்ந்த டோல்ஸ்டோய், துர்க்கனேவ் என்பவர்களின் நாவல்கள் பரிபூரணமானவை என்பது எனது உறுதியான முடிவாகும். அவைகளின் படைப்புக் காலத்தை கருத்தில் கொண்டால் மேற்கத்திய இலக்கியம் வெற்றிவாகை சூடிய மூன்று காலகட்டங்களில் அதுவும் ஒன்றாகும் மற்றையவை இரண்டும் ஆதெனிய நாடகாசிரியர்கள், பிளேடோ என்பவர்களினதும் சேக்ஸ்பியரினதும் கால கட்டங்களாகும். கேம்பிறிஜ், சென்ற்ஜோன் கல்லூரியைச் சேர்ந்த இன்னுமொரு ஆராய்ச்சி மாணவரான கில்பேர்ட்பெல்ப் ஆங்கில புனைகதையில் ருஷ்யநாவலின் தாக்கம் பற்றிய தமது ஆராய்ச்சி முடிவுகளை 1956ல் வெளியிட்டார். ஜோர்ஜ் கிங்ஸிங், ஜோர்ஜ் மூர், ஹென்றி ஜேம்ஸ், ஆர்னோல் பென்னட், கல்ஸ்வொர்த்தி, ஜோசப் கென்டர்ட், வர்ஜினியாவூல்ப் என்பவர்களில் துர்க்கனோவின் பாதிப்பை இனம் கண்டு, அவரை ''நாவலாசிரியர்களின் நாவலாசிரியர்'' என்று பெல்ப் வர்ணிக்கிறார்.

ஃபெல்பின் நூலின் ஐந்தாவது அத்தியாயம், பூராவும் ஹென்றி ஜேம்ஸின் சிறுகதைகளிலும் நாவல் களிலும் விரவியுள்ள துர்க்கனோவின் செல்வாக்கு பற்றியே பேசுகிறது. உண்மையில் ஹென்றி ஜேம்ஸின் 'அமெரிக்கனி'ல் மறைந்து கிடப்பது துர்க்கனோவின் 'மேன்மக்களின் கூடு'தான் ... இந்த இரு நாவல்களும் ஒரே மாதிரியானவை, ஹென்றி ஜேம்ஸ் வேண்டுமென்றே துர்க்கனோவை பாவனை பண்ணி இருக்கிறார் என்று காரணம் காட்டி ஆங்கில அமெரிக்க விமர்சகர்கள் அவரை கடுமையாக சாடினர்.

பாரிஸில் வைத்து துர்க்கனோவ் ஹென்றி ஜேம்சை ஃபிளம்பேர்ட்டுக்கும் அவரின் வட்டத்தினருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிமுகத்துக்கு பின்னர் ஹென்றி ஜேம்ஸ் டபிள்யூ .டி. ஹேவெல்லுக்கு எழுதிய கடிதமொன்றில் ஃபிளமபேர்ட்டையும் அவரின் வட்டத்தினரையும் பற்றி குறிப்பிடுகையில் ''அவர்களோடு நான் நெருங்கிப் போகாமைக்கு ஒரு ஐம்பது காரணங்கள் உண்டு. அவர்களை அறிந்து கொள்ள நானும் மற்றவர்களை கவனத்துக்கெடுக்க அவர்களும் விரும்பவில்லை. அவர்கள் எல்லோருக்குமே துர்க்கனோவ் நிகரானவர்''

துர்க்கனோவின் 'ஸ்பேர்ர்ட்ஸ்மென்ஸ் ஸ்கெட்சஸ் Sportsman Sketches என்னும் கதைபற்றி எழுதிய கட்டுரையொன்றில் ஜேம்ஸ் சொல்கிறார், ஒழுக்க அர்த்தங்கள் ஒரு வடிவத்தை அமைக்கின்றன. இவ்வடிவம் அவைகளுக்கு நெகிழ்ச்சியைத் தருகிறது. தேவையானவற்றை செதுக்கி எறிந்து திறமையாக வடிவமைக்கப்பட்ட மலர்ச்சாடிகளை பிரெஞ்சு யதார்த்தவாதிகள் படைக்கவில்லை. துர்க்கனோவ் மனிதனின் அழகியல் உணர்வு களையும் சமயத்தின் பாதிப்புகளையும் உள்ளடக்கி நிற்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கற்பனாவாதம் யதார்த்தவாதம் என்னும் இரு நன்கு காலுன்றி நிற்கும் ஆங்கில இலக்கியத்துக்கு வெளியிலிருந்து எந்த தூண்டுதலும் தேவையில்லை என்று சொல்லும் ஃபெல்ப்... ஆயினும் மொழிபெயர்ப்பு கனினூடாக மாபெரும் ருஷ்ய நாவலாசிரியர்கள், ஆங்கில புனைகதைப் பாரம்பரியத்தில் ஒரு பாகமாகியுள்ளார்கள் என்று சொல்வது மிகையானதல்ல. இந்த ருஷ்ய செல்வாக்கு ஒரு மறுமலர்ச்சியின் தரத்ததாயில்லாவிடினும், நிச்சயமாக கணிசமான அளவுக்கு குறைவானதல்ல'' என்று தனது ஆய்வுரையை முடிக்கிறார்.

ஒரு ஐம்பது ஆண்டுகள் ருஷ்ய நாவலின் சாதனையானது ஒரு சில எழுத்தாளர்களின் மேதமையில் மாத்திரம் தங்கி நிற்கவில்லை. ருஷ்ய மக்களின் வாழ்வும் மேதாவிலாசமும் அந்த நாவலாசிரியர்களின் சாதனைக்குள் நின்று ஒளிர்கிறது. புரட்சிக்கு பின்னர் ருஷ்ய இலக்கியத்தின் அபிவிருத்தியில் கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கு இருந்த போதிலும் சகல எழுத்தாளர்களின் நாவல்களில் இந்த அம்சம் வெளிப்பாடு கொள்ளவே செய்கிறது.

டான்நதி அமைதியாக ஒடுகிறது கன்னிநிலம் புரட்டப்பட்டது'' என்பவற்றின் ஆசிரியரான எம். ஷெலகோவின் அண்மைய திரைப்பட கதையொன்று நம்பமுடியாத சித்திரவதைகளுக்கும் துயரங்களுக்கும் உட்படும் ஒரு இராணுவவீரனின் வாழ்க்கையை விபரிக்கிறது. அவன் தனது உயிருக்கும் துணிந்து ஜெர்மன் சிறை முகாமிலிருந்து தப்பிக்கிறான். பின்னர் தனது தாய்நாட்டின் சேவையில் ஈடுபடுகிறான்தனது வீடு, மனைவி, குடும்பம், உட்பட முழுக்கிராமமுமே எதிரியின் குண்டுத்தாக்குதலால் அழிவுற்றிருந்த போதிலும் வாழ்க்கை மீதும் மனிதர்மீதும் ஒரு பற்றுறுதியுள்ளவனாகவே இருக்கிறான். ஜீவனோபாயத்துக்கு ஒரு தானிய லொறியின் சாரதியாகி தனது வாழ்க்கையை நடத்துகிறான். போரிஸ் பெல்வொயின் 'உண்மை மனிதனின் கதை என்னும் புரட்சிக்குப் பிந்திய இன்னுமொரு நாவல் நம்பமுடியாத துன்பங்களுக்குட்பட்ட ஒரு ருஷ்ய விமானியின் வாழ்வை விபரிக்கிறது. அவனுடைய விமானம் எதிரியால் சுடப்பட்டு ஒரு காட்டில் விழுகிறது. உடைந்த கால்களோடும் நெரிபட்ட உடலோடும் காளான்களையும் எறும்புகளையும் தின்று உயிரைப் கையில் பிடித்துக்கொண்டு பதினெட்டு நாட்கள் புதர்களிடையே ஊர்கிறான். ''அவன் ஒரு கரையான் புற்றைக் கண்டான். மழையால் படியவைக்கப்பட்டும் கழுவப்பட்டும் உள்ள ஒரு வைக்கோற் போரைப் போல் அது தோன்றியது. அலக்ஸி மெதுவாக புற்றுக்குள் கையை விட்டு எடுத்தபோது கரையான்கள் ஒட்டிக்கொண்டு வந்தன. அவன் அவைகளை மிகுந்த ஆவலோடு உண்ணத்தொடங்கினான். வாயில் உண்டான போமிக்கமிலத்தால் நா வரண்டது. வாய் வெடிக்க தொடங்கியது''

அலெக்ஸி மரெஸ்யெவ் குடியானவர்களால் காப்பாற்றப்பட்டு மாஸ்கோ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப் படுகிறான். அங்கே மொழிக்குக் கீழ் கால் கழட்டப்பட்டு காப்பாற்றப்படுகிறான். சத்திரசிகிச்சையின் காயங்கள் ஆறியபோது திரும்பவும் விமானமோட்டியாக விரும்புகிறான். ஆனால் இராணுவ விதிகள் அவ்வாறான ஒருவரை சேவையில் அமர்த்த மறுக்கின்றன. அலெக்ஸி தனது வேதனையை பொறுத்துக் கொண்டு ஓடி ஆடி பயிற்சி செய்கிறான். இவ்வாறு நீண்ட பொறுமையான பயிற்சியின் பின்னர் தனது நோக்கத்தை எய்துகிறான்.

துயருறுவோர் நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்தும் முனைதல் என்பது ருஷ்யமக்களின் வாழ்வின் ஒரு அம்சமாக இருக்கிறது. என்ற கருத்தை ருஷ்ய நாவலைக் கற்பவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் கம்யூனிச தத்துவமும் அதனுடைய இலக்கிய கோட்பாடான சோசலிச யதார்த்தவாதமும் துன்பங்களைச் சகித்துக் கொள்ளல் என்ற இந்த ருஷ்யர்களின் குணவியல்பை துடைத்துவிட முனைந்தன. மேலே குறிப்பிட்ட புரட்சிக்கு பிந்திய இரு கதைகளும் தம்மில் பிரசார அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும் துன்பங்களைக் சகித்துக் கொள்ளல் என்ற இந்த ருஷ்யபண்பை வெளிப்படுத்துகின்றன. ''துயருறுவோர்களிடமுள்ள தணியாவேட்கை'' ருஷ்ய ஆன்மாவிலுள்ள ஒரு அம்சம் என்று டோஸ்டோவெஸ்கி குறிப்பிடுகிறார், இதுவே புராதன இலங்கை இந்தியாவில் விளைந்த பௌத்த இந்து ஞானங்களினதும் அடித்தளமுமாகும். ருஷ்யர்கள் ஐரோப்பியர்கள் மாத்திரம் அல்ல ஆசியர்களும் கூட ஆவார்கள்'' என்று டோஸ்டோவெஸ்கி சொல்வார் ''இந்த பார்வையின் மொத்த தவறே நாங்கள் ஆசியர்கள் அல்ல ஐரோப்பியர்கள் என்பதே, இவ்வாறு நாங்கள் ஒரு போதும், இருந்ததில்லை. இந்த பிழையான அபிப்பிராயத்திற்காக மதிப்பிடற்கரிய பெறுமதிகளை இழந்திருக்கிறோம் இதில் எங்களது ஆத்மாவின் சுதந்தரத்தை இழந்ததும் வெற்றிதராத ஐரோப்பாவின் கொள்கைகளைப் பின்பற்றி அடங்கும்.

பிரெஞ்சு ஆங்கில இலக்கியங்களாலும் ஜேர்மன் தத்துவத்தாலும் ருஷ்ய நாவலாசிரியர்கள் செழுமையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்வேகமும் அடைந்தனர். மேலைச்சார்பு ஸ்லோவோனிக் சார்பு என்றும் இரு தரப்பு விமர்சகர்களிடையே 19ம் நூற்றாண்டில் ஒரு விவாதம் நிலவியது. பின்னையோர் சில ருஷ்ய நாவலாசிரியர்களை மேலைநாட்டுக் கருத்துக்களை பாவனை செய்தனரென்றும் இரவல் பெற்றனரென்றும் குற்றம் சாட்டினர். ருஷ்ய நாவல் பிரெஞ்சு ஆங்கில நாவலை விட மகத்தானது என்று பாராட்டிய ஐரோப்பிய விமர்சகர்களும் சில ருஷ்ய நாவலாசிரியர்களிடம் டிக்கென்ஸ், பால்சாக், ஃபுளும்பேர்ட் மற்றும் ஜேர்மன் தத்துவ ஞானிகளான ஹெகல் சோபன்ஹேனர், நீட்சே போன்றவர்களின் செல்வாக்கை இனம் காணத்தவறவில்லை.

ருஷ்யா ஒரு பரந்த நாடாகும். புரட்சிக்கு முதல் ஏறக்குறைய எண்பது விதமானோர் குடியானவர்களாயும் கொத்தடிமைகளாயுமிருந்தனர். மேற்கின் தாக்கத்துக்குட்பட்டிருந்த உடைமையாளர்களும் இளைப்பாறிய ஜெனரல்களும் தங்களுடைய நிலங்களில் கொத்தடிமைகளாக உழன்ற இந்த குடியானவர்கள் மீது எவ்வித அனுதாபமும் கொண்டிருக்கவில்லை. இந்த பிரபுக்குலத்தினருக்கு அடுத்த தரத்திலிருந்த மேன்மக்களும் மேற்கின் குறிப்பாக பிரெஞ்சின் செல்வாக்குக்குட்பட்டுதானிருந்தனர். இந்த மேன்மக்கள் தம் வீட்டுமொழியாக ஆயினும் விவசாயிகள் மீது மிகுந்த அனுதாபமும் ஆழ்ந்த புரிந்துணர்வும் கொண்டவர்களாயிருந்தனர். இந்த மேன்மக்கள் தம் வீட்டு மொழியாக பிரெஞ்சைக் கொண்டு அதன் இலக்கியத்தில் தோய்ந்து நன்கு பண்பாடுற்றிருந்தனர். இது இவர்களிடையே ருஷ்யமக்களின் தனிச்சிறப்பு மிக்க விழுமியம், கலாசாரம், மொழி ஆகியவற்றிடையே ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் உணர்வை வளர்த்தது. இந்த மேற்கின் செல்வாக்கும், செழுமையும் உருகி ஒன்று கலந்து ஒரு வினோத அழகோடு ஒளிரும் ருஷ்ய ஆன்மாவை'' கோர்க்கினின் உருவக நயமிகுந்த வார்த்தைகளில் படைத்தது. இவ்வாறு இரு பாரம்பரியங்களின் ஒன்றிணைவு ருஷ்ய நாவலாசிரியர்களின் மாபெரும் சாதனையை சாத்தியமாக்கியது. ''நாங்கள்'' டோஸ்டோவெஸ்கி கூறுவார்: ''தேசங்களின் செழுமைகளையெல்லாம் எங்கள் ஆன்மாவில் கலந்து, மாபெரும் ஆரிய இனத்தின் பல்வேறு கிளைகளையெல்லாம் இணைத்து அனைத்துலக மனிதனைக் காணவேண்டும். என்ற அபிலாஷை இவ்வாறு வெளிப்படுத்துகிறோம்.

கல்வி அறிவற்று மூடநம்பிக்கைகளில் மக்கள் ஆழ்ந்திருந்த போதிலும் இவ் ஒன்றிணைவு ருஷ்ய மேதையரை வாழ்க்கையை ஆழமாக காணவும் உணரவும் வைத்தது.

ருஷ்யா நாவல்களைப் படித்த சில மேற்கின் எழுத்தாளர்கள் ருஷ்ய மக்களின் இயல்பும் சிறப்பும் ஆசியாவுக்கு குறிப்பாக இந்து, பௌத்தர்களுக்கு நெருக்கமானதோ என ஐயுற்றனர். டோல்ஸ்டோயின் சமயத்தை லாங்கோ லார்வின் 'தன்னலமற்ற பௌத்தசமய கிறிஸ்துவம்' என்று வர்ணிப்பார். கிரமச்சோவ் சகோதரர்கள் என்னும் நாவலில் வரும் அலியோசாவை ரிச்சர்ட்ஹேர் என்பவர் 'பௌத்த புராணக்கதைகளில் வரும் போதிசத்துவர்' என அழைக்கிறார் ''அல்லது ஒருவருக்கும் இம்சை செய்யாமை'' என்று கூறும் அன்டேர்கைட் நான் மேலும் இவ்வாறு சொல்லமுடியும். பால்சாக்கின் கொமடி குமைனில் வெளிவருவது வேதவாக்கிற்கும் இலத்தீனிய உணர்வுக்குமிடையே உள்ள மனோபாவமாகும் ஆனால் டோஸ்டோ வெஸ்கியினுடையதோ வேதவாக்கிற்கும் ஆசிய, பௌத்த உணர்வுக்குமிடையே பிறக்கிறது.'' டோஸ்டோவெஸ்கின் நாவலில் வரும் கிரில்லோவைப் பற்றி இவான்றோ குறிப்பிடும் போது ''இந்த சான்றுகள்... கிரிலோவினுடைய உணர்வுகள் எங்கேயிருந்து பிறக்கின்றன எனக்காட்டுகின்றன. அவர் நிர்வாண பதவியை நாடி நிற்பவராகவும் சொர்க்கத்தை இங்கே இக்கணமே காணவிழைபவராகவும் தோன்றுகிறார். இது அவரின் மனத்தில் எங்கேயோ அமிழ்ந்து கிடப்பதை தெளிவாக உணரமுடிகிறது.

துர்க்கனோவ், செக்கோவ் என்பவர்களின் வாழ்க்கை, கலை பற்றிய நோக்கு கிழக்கை விட மேற்கைச் சார்ந்தது, ஆயினும் அவர்களின் கதைகளில் ஒரு துயரம் இழையோடிச் செல்கிறதென்று ஐரோப்பிய எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களில் சிலர் இத்துயரை வாழ்க்கை பற்றிய பௌத்தநோக்கோடு இணைப்பர். பூரணமற்ற அர்த்தபாவத்தில் இவ்வாறு கருதுவது பௌத்தம், அதன் வாழ்க்கை நோக்கு மற்றும் ஆசிய மக்கள் பற்றி இவர்களின் தெளிவின்மையை வெளிப்படுத்துகிறது.

துயரங்களை தாங்கிக்கொள்ளல் அல்லது துயரங்களுக்குள்ளாதல் என்பது பெறுமதிமிக்க வீரப்பண்பாடாகும். இதுவே தீவிரவாதிகள், புரட்சிவாதிகள், விஞ்ஞானிகள் சிந்தனையாளர்கள் என்பவர்களிடையேயும் பெரும் ஞானிகள், சமய தீர்க்கதரிசிகள் போன்றோரிடையே கூட மறைந்து கிடக்கின்ற இயல்பாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருஷ்ய நாவலாசிரியர்கள் துயருறுவோரின் 'வேட்கையை' அல்லது அவர்களில் உள ஆத்மீக வல்லமையை நன்கு அலசியுள்ளனர். புரட்சிக்குப் பின்னர் ருஷ்ய நாவலாசிரியர்கள் நாவல்கலையில் மேலோங்கி நின்றது போல் விஞ்ஞானிகளும் ஐரோப்பிய அமெரிக்க விஞ்ஞானிகளின் சாதனைக்கு நிகரான சாதனையை ஈட்டினர். ஐரோப்பாவில் விஞ்ஞானம் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாக வளர்ந்து வருகிறது. ருஷ்யா, 1917 வரையும் எண்பது வீதம் விவசாயிகளைக் கொண்ட நாடாக இருந்து வந்தது. இப்படியான ஒரு நாட்டில் இவ்வாறான ஒரு சாதனை பற்றிய பேச்சுக்கே இடமில்லை. ஒரு நாற்பதுக்கும் குறைந்த ஆண்டுகளில் இப்படியொரு சாதனை கைகூடி இருக்கிறதென்றால் அதற்கு காரணம் மார்க்சீய லெனினிச கம்யூனிசமாகும். ஆயினும் இச்சாதனையின் வெற்றி முழுவதும் கம்யூனிசத்தில் மாத்திரம்தானா சார்ந்துள்ளது? என்னுடைய உட்கிடை, மக்களின் துயரங்களிலிருந்து முனைப்புறல் போன்ற உயரிய விழுமியங்களை ருஷ்ய கம்யூனிசம் நன்கு நெறிப்படுத்தி பயன்படுத்திக் கொண்டுள்ளதென்பதே, சில வேளைகளில் மூர்க்கமான முறைகளிலும் கூட.

முதலாளித்துவ நாகரீகம், அதன் சினிமா, இலக்கியம், நாடகம், ஒபரா என்பவற்றில் பாலினச்சுரண்டல், மற்றும் வர்த்தகரீதியான வக்கிரங்கள் இவைகளுக்கெதிரான சோவியத் ரஷ்யாவின் வெறுப்பு வெறும் அரசியல் ரீதியானது மாத்திரமல்ல. இந்த வெறுப்புக்குப் பின்னே மாபெரும் இலக்கியமொன்றை உருவாக்கிய பழமையான ஆத்மீக மனிதாயத உள்ளுணர்வொன்று ஊடோடி நிற்கிறது. ஆசிய ஆபிரிக்க மக்கள் மீது ரஷ்யாவின் அனுதாபம் என்பதும் வெறும அரசியல் மாத்திரம் அல்ல. இவை புதிய அரசியல் அக்கறையினதும் பழைய மனிதாயத கருத்துக்களினதும் விளைவுகளாகும். புரட்சிக்குப் பின்னர், தனது உருவக அணிமிகுந்த வார்த்தைகளில் கோர்க்கி விபரித்தது போல் ''ருஷ்யாவின் கலை எல்லாவற்றையும் விட இதயத்தின கலையாகும். மானுடத்தின் என்றும் தணியாத இலட்சியநேயமும் அதன் பிரகாசமும் எங்கள் கலைஞர்களின் படைப்புக்களில் உள் நின்று ஒளிர்கின்றன.''

செக்கோவும் எல்லா பெரிய ருஷ்ய நாவலாசிரியர்களும் சிறுகதை எழுதினர். சிறுகதைக்கென்று ஒரு பிரத்தியேகச் சொல் ருஷ்ய மொழியில் கிடையாதென்று நினைக்கிறேன். 'ரக்ஸ்காசி' என்றால் கதை, பெவெஸ்ட் என்றால்விபரிப்பு. றோமன் என்பது ருஷ்ய மொழியில் நாவலைக் குறிக்கும். 'ஸ்காஷ்' என்றால் கதை (Tale) யாகும். இன்னும சில விமர்சகர்கள் ரஷ்யநாவல்களும் சிறுகதைகளும் உருவம், உள்ளடக்கம், உத்திபோன்றவற்றில் குறைபாடுடையன என்று கூறுகின்றனர். டால்ஸ்டாயின் அன்னாகரேனினா, போரும் அமைதியும் என்பன உருவம் உள்ளடக்கம், உத்திபோன்ற ஆக்கவியற் குறைபாடுகளைக் கொண்டன என்று பேர்ஸிலுப்போப் தனது நூலில் ஆராய்ந்து குறிப்பிடுகிறார். கிரமச்சோவ் சகோதரர்கள், கொலோவிலோவ் குடும்பம் என்பன மகத்தான இரு நாவல்கள் என்று ஆர்னோல்ட் பென்னட் கருதுகிறார். ஆயினும் ஆங்கிலத்தில் நாவல் எழுதுதல் பற்றி ஒரு பயிற்சியை மேற்கொண்ட மாணவர் ஒருவர் அவைகளின் ஆக்க உத்திகளில் பாரிய குறைபாடுகளைக் காணுவர் என்கிறார். அவர். சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஸ்டேன்ட் மகஸின் ஆசிரியரால் எழுதப்பட்ட செக்கோவின் 'டாலிங்' என்னும் கதை பற்றிய நீண்ட விமர்சனக் கட்டுரை ஒன்றைப் படித்தேன். இது ஒரு சிறுகதையல்ல, ஒரு விபரணக்கதை (Anecdote) அல்லது ஒரு அறிக்கை என்ற முடிவுக்கு அவர் வருகிறார். கோர்க்கி, செக்கோவ் மற்றும் பழைய சிறுகதையாசிரியர்கள் ஆகியோரை பேராசிரியர் கிரோபெற்கின் 'நாட்டு நாவலாசிரியர்கள்' என்றே அழைப்பார். நிக்கொலாய் லெக்கோவ் ஒரு ஆழமான பார்வையுடைய சிறுகதையாசிரியர். ஜாங்கோ லார்வின் அவருடைய சிறுகதைகளை 'ஸ்காஸி' என்று அதாவது நாட்டார் கதைகள் என்று அறிமுகம் செய்கிறார். இவ் விசயங்களெல்லாம் ருஷ்ய நாவல், சிறுகதையாசிரியர்களின் கோட்பாடுகள், உருவம், உத்திபோன்ற எழுத்தாக்க உபாயங்கள் யாவும் தன்னிச்சையாக விருத்தியடைந்தன எனக்கருத வைக்கின்றனர்.

வாழ்க்கைக்கு முடிவும் இல்லை ஆரம்பமும் இல்லையாதலால் சிறுகதைக்கு முடிவும் இல்லை என்று செக்கோவ் சொல்வார். ஒரு வகையில் மேற்கின் சிறுகதை பற்றிய விமர்சனமாகக் கூட கொள்ளலாம். வாழ்க்கையும் கலையும் தம்முள் இரண்டறக்கலந்தவை என்ற பௌத்த, இந்து நோக்குடைய எழுத்தாளரும் இப்படித்தான் சொல்லி இருக்கமுடியும். சிறுகதை பற்றிய மேற்கின் கோட்பாடுகளை மார்ஸிம்கோர்க்கி அறிந்தே இருக்கவில்லை. ஸ்போர்ட்மென்ஸ் ஸ்கெச்சஸ் (Spotsmans Sketches) என்ற தலை சிறந்த கதையின் மூலம் துர்க்கனோவ் மேற்கில் செல்வாக்குற்றிருந்த சிறுகதைக் கலைக் கோட்பாடுகள் பற்றிய பிரக்ஞை உடையவராக இருந்தார் எனத் தெரிகிறது.

தற்போதைய தேசியவாத கொந்தளிப்பும் அதன் அரசியல் பொருளாதார போக்குகளுக்குமப்பால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களது இலக்கியம் பெரும் முக்கியத்துவமுடையது. இது நமது எழுத்தாளர்கள், கலைஞர்கள், விமர்சகர்கள், கல்விமான்கள் ஆகியோரை சுயவிமர்சனம் செய்ய தூண்டவல்லது. அத்தோடு இலங்கையில் பெரும் செல்வாக்கும் அந்தஸ்தும் பெற்று விளங்கும் மேலை இலக்கியம், கலை, கலாசாரம் என்பவற்றின் பிடியிலிருந்து மீளவும் வழிவகுக்கும்.

ஆதிக்கம் பெற்றிருந்த பிரஞ்சு இலக்கியக்கலைக் கோட்பாட்டின் செல்வாக்கை குறைப்பதற்கு தனித்து ருஷ்ய நாவல் ஆற்றிய பங்கு அதிகமானதென்று ஆங்கில விமர்சகரும் சிந்தனையாளருமான மில்ட்டின்டன் மியூரி சொல்கிறார். கில்பெர்ட்பெல்ப் தன்னுடைய ஆங்கில புனைகதையின் மீது ருஷ்ய நாவலின் தாக்கம் பற்றிய ஆராய்ச்சியில் கூறுகிறார். பிரெஞ்சு இயற்பண்புவாதிகளின் ஆதிக்கத்திலிருந்து ஆங்கில நாவல் தப்பித்துக் கொண்டது. ருஷ்யநாவலின் துணையினால்தான், துர்க்கனோவ், செக்கோவ் போன்றவர்களிடமிருந்தே ஆங்கில நாவல் உண்மையான யதார்த்தவாதத்தை பெற்றுக்கொண்டது.

சிங்கள ஜாதககதைகள், பாலிவசன, கவிதைகள் என்பவற்றின் ஊடாக வரும் இலக்கியப்பாரம்பரியத்தை யும் எங்களது கிராமத்தவர்களின் வாழ்க்கையையும் அடித்தளமாக கொண்டாலேயே சிறுகணத்தில் நாவல்கலையை வளர்த்தெடுக்கமுடியும். அதோடு எழுத்தாளர்கள் ருஷ்ய நாவலைக் கற்கவும் வேண்டும். என்னால் நிச்சயமாக சொல்ல முடியும் இது எழுந்தமானமாக மேற்கிலிருந்து பெற்றிருக்கிற மேலோட்டமான பாவனை உணர்வுக ளோடு சமஸ்கிருத மொழியிலிருந்து இரவல் பெற்ற பிற்கால அலங்கார மிகை உணர்வு சார்ந்த உரைநடை, செய்யுள்கள் இலக்கியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவும் வகை செய்யும் எல்லா வளங்களிலிருந்தும் பெற்று ஆத்மாவின் உள்ளொளியுடன் அதைக் கலந்து எங்களது தாராள சிந்தனையுடைய சமயத்தின் சுதந்திரமான விமர்சன அளவுகோல்களால் அதை மதிப்பிட்டுக் கொள்ளுதல் வேண்டும். பின்னரும் இதைச் செழுமைப்படுத்தி ஓர் ஆயுதமாக, அழிவுக்கல்ல ஆக்கத்திற்கே பயன்படுத்த வேண்டும். *(1957 காலப்பகுதியில் எழுதப்பட்டது)*

☐ *ஆங்கிலத்தில்: மார்ட்டின் விக்ரமசிங்க*
☐ *தமிழில்: சா. தட்சணாமூர்த்தி*

## அபிப்பிராயங்கள்

............ஆகவே எல்லா அசம்ங்களையும் தொட்டுச்செல்கிறது. காத்திரமான கலை இலக்கிய வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கிறேன். புதிய பரிமாணங்களைப் பற்றிச்சிந்திக்கத் தூண்டும்போலவும் தென்படுகிறது.

கருத்துக்கள் மாறிக்கொண்டிருப்பதுதான் வளர்ச்சிக்கு நல்லது. தேக்கம்கூடாது. பிடிவாதமான அறிவு மடமையைத்தான் வளர்க்கும். ஆகவே கவலைப்படாமல் மனதில் பட்டதை, தெளிவானதைச் சொல்லத் தயக்கம் வேண்டாம்.........

*வை. அஹமத் - மட்டக்களப்பு*

......... நல்ல இலக்கிய தேடலும் பரிச்சயமும் உள்ள உங்களுக்கு எங்களைப் போன்றவர்களின் பசிக்கு - இலக்கியத்தீனிபோட நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. கைவிட்டு விடாதீர்கள்..... ...

*நந்தினி சேவியர் - திருகோணமலை*

.......... இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் (பலவிதத்திலும்) ஆகவே மாதிரியான இலக்கிய முயற்சி பாராட்டுதற்குரியது. தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்... ......

*(ஓசை சார் பாக) மனோ - பிரான்ஸ்*

........."ஆகவே" நல்ல முயற்சி. முயற்சி வளர்ச்சி காணும்........

*உடுவை தில்லை நடராசா - வவுனியா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உண்ணி

வடிவேலுவிற்குச் சில நாட்களாக வலதுகாது ஒரே 'குத்து குத்தென்று' குத்தியது. வலது கன்னமும் தாடைகளும் கூட வீங்கிவிட்டன.

தாயார் என்னென்னவோ கைமருந்துகளை எல்லாம் செய்து பார்த்தாள். ஒன்றுமே பலிக்கவில்லை.

காதுக்குத்தோ பல்வலியோ சகிக்கமுடியாத வேதனையாக இருக்கையில் டிஸ்பிரின் குளிசை போட்டாற் சற்று இதமாக இருக்கும் என்பது வடிவேலுவிற்கும் தெரியும்.

ஆனால் ஊருக்குள்ளே கொண்டு வருவதற்குத் தடை செய்யப்பட்ட பொருட்களில் டிஸ்பிரினும் அடக்கம்! ஆகவே எந்த வலி வந்தாலும் மூதூர் ஆஸ்பத்திரிக்குப் போவதைத் தவிரக் கிராமத்தவர்களுக்கு வேறு வழியே இல்லை.

வடிவேலுவிற்கு மூதூர் வைத்தியசாலைக்குப் போகப்பயம்! ஏனென்றால் அவனுக்கு வயது பதினெட்டு. ஆகவே உள்ளூர் வைத்தியர்களின் கைமருந்துகளோடு அமையவேண்டியதாயிற்று.

''இது கணச்சூடுதான், நல்லாக் குளிச்சு முழுகவேணும்'' என்றார் வடிவேலுவின் தாய் வழிப்பாட்டனார்.

வடிவேலுவிற்குச் சிரிப்புத்தான் வந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆண்டுதான் மாரி முறையாகப் பெய்கிறது என்பது ஊரவரின் அபிப்பிராயம். கார்த்திகைமாசம் முழுக்க ஒரே மழை. நிலம் 'ஊற்றுக்கொண்டு' ஊரெல்லாம் ஒரே வெள்ளக்காடு! நாட்கணக்காக வெய்யில் முகத்தையே காணவில்லை. ஒரே குளிர்! வெடவெடென்று ஒரே கூதல்!

'இந்த நிலையிற் சூடும் மண்ணாங்கட்டியும்' என்று அலுத்துக்கொண்டான் வடிவேலு.

ஆனாலும் அவன் காதுவலித்தது! வலி தொடங்கி ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. வடிவேலு படுக்கையில் விழுந்துவிட்டான்.

விதவைத்தாய்க்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பாவம்! அவளது இஸ்டதெய்வமான வெருகல் சித்திர வேலாயுதர் கூட, பத்து ஆண்டுகளாகப் பூசை புனஸ்காரங்களின்றி ஆற்றங்கரையிற் தவித்து நிற்கையில் அவளால் யாரிடந்தான் முறையிட முடியும்?

அவளுக்கு ஒரே பயம்!

ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் ஆமிக்காரர்கள் வேலிக்கம்பியை வெட்டிக்கொண்டு நடுமுற்றத்தாற் சென்று கொண்டிருக்கையில் மகனைப் பிடித்துவிடுவார்களோ என்ற பயம்!

தலைக்கோழி கூவிச் சில பொழுது கழிந்த பின்னர்......

காகம் கரையத்தொடங்கச் சற்று முன்னர்......

விடிவெள்ளிக்குக் கீழாகக் கிழக்கு வெளுத்துக்கொண்டு வருகையில்......

நாய்கள் குரைத்து ஊளையிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாயின் ஊளைச்சப்தம் இயமன் வருகைக்கான கட்டியம் என்பது ஊரவர்களின் ஐதீகம்! ஆனால் இப்போது அது ஐதீகமல்ல. யதார்த்தமான உண்மை!

தூரத்தே நாய்குரைப்புச்சத்தம் கேட்கையிலேயே வடிவேலுவும் அவன் வயதொத்த இளைஞர்களும் வீடுகளைவிட்டு ஓடிவிடுவார்கள்! வீட்டிலே கிழடுகட்டைகள்தான் மிஞ்சும்!

ஆற்றைக்கடந்தால் கரச்சை! அதையும் தாண்டினால் நீர்முள்ளிகளும் கண்டல்களும் அடர்ந்தகாடு!

மீண்டும் இராணுவம் திரும்பித் தங்கள் காம்புக்கு போகும்வரைக்கும் அந்தக்காடுதான் அவர்களின் சரணாலயம்! இந்தியாவும், சுவிஸ்ஸும், பிரான்ஸும் அந்தக்கிராமத்து இளைஞர்களுக்குக் கைக்கெட்டாத விவகாரம்

கன்னம்வீங்கிப் படுக்கையிற் கிடக்கும் வடிவேலுவின் தலைமாட்டில் ''ஆமிக்காரன் வந்தா எப்படி ஓடி ஒளியப்போகிறான்'' என்று சிந்தித்தவாறே இருக்கிறாள் அவன் தாய் வள்ளியம்மை!

''என்னக்கை செய்றாய் ஊட்டுக்குள்ளே''? கேட்டுக்கொண்டே தம்பி சிவப்பிரகாசம் வீட்டினுள் நுழைகிறான்.

''காதுக்குத்து இன்னும் அப்படியேதான்டா இருக்கு, எந்த மருந்தும் கைகொடுக்கல்ல, மூதூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவும் பயமாயிருக்கு, ஆமிக்காரனுக்கு எல்லா வாலிபப்பொடிகளுமே புலிதான்''

சிவப்பிரகாசம் சற்று யோசித்துவிட்டு, முற்றத்தில் வேப்பமரத்தோடு சார்த்தி வைத்த சைக்கிளை ஸ்ராண்டில் வைத்துவிட்டுப் பின்சில்லைச் சுழலவைக்க, வேகமாகப் பெடலைச்சுற்றும்படி அக்காவிடம் ஆணையிடுகிறான்.

சக்கரம் சுழல்கிறது! அதன் சுழற்சியில் 'டைனமோ' வேலை செய்யச் சைக்கிள் லைற் எரிகிறது!

கைத்தாங்கலாக வடிவேலுவை முற்றத்துக்கு கொண்டு வந்து ஸ்டூலில் இருத்தி வலதுகாதின் துளைக்குள் சைக்கிள்லைட்டின் ஒளியைப்பாய்ச்சி......

காதுக்குருத்துச்சவ்வில் ஒரு உண்ணி!

இரத்தம் குடித்துக் பருத்துக் கபிலநிறப் புள்ளியாய் .....

ஆட்காட்டி விரலையும் கட்டை விரலையும் சேர்த்துப்பிடித்து, ஊசித்துவாரத்துள் ஒட்டகத்தை நுழைத்த கதையாக அவ்விரல்களை வடிவேலுவின் காதுமடலிலே நுழைத்து......

''விடுங்கமாமா'' என்று வடிவேல் அலறுகையிலேயே சிவபபிரகாசத்தின் விரல்கள் உண்ணியோடு வெளிவந்தன.

சருகுண்ணி!

''எப்படி இது காதுக்க நுழைஞ்சிது?

வடிவேலுதான் நொடியை அவிழ்க்கிறான்.

''ஒண்ணரை மாசத்துக்கு முன்னால ஆமிக்காரன் ரவுண்டப்புக்கு வரக்குள்ள விடியக்காலையிலேயே காட்டுக்குள்ள ஓடிற்றன். சுத்திவர ஒரே வெடிச்சத்தம். ஷெல்லும் விழுந்திது. பகல்முத்திலாச் சருக அள்ளி மூடிற்றுப்படுத்திருந்தன், அன்று முத்திலாச் சாப்பாடும் இல்ல, வீட்ட திரும்பி வரக்குள்ள இருட்டுப்பட்டிற்று. அன்றைக்குத்தான் இந்தச் சருகுண்ணி காதுக்குள்ள பூந்திருக்கும்''

''சரி, இப்ப அதைப் புடுங்கிற்றன்''

வடிவேலுவிற்கு இன்னமும் காதுவலித்துக் கொண்டிருந்தது. காதுக்குருத்திலிருந்து இரத்தம் கசிந்தது.

உண்ணி கழன்றாலும் வேதனை தீராதா? வடிவேலுவிற்கு அதற்கு விடை தெரியவில்லை.

☐ வ. அ. இராசரத்தினம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு கடிதம்

எம். ஏ. நுஃமான் அவர்களுக்கு,

அன்புடன்-

காலச்சுவடு 1991 சிறப்பிதழ் படிக்கக்கிடைத்தது, 102ம் பக்கத்தில் உங்களால் எழுதப்பட்ட தேரோடும்வீதி அல்லது சிவகதிரேசனின் மனஉலகம் கட்டுரையை மிக அவகாசமாய் - நிதானமாய்ப் படித்து முடித்ததும் என்னுள் எழுந்த சில சலனங்கள்.

.........இவ்வளவு பக்கங்களையும் பொறுமையோடு படித்து முடித்த பிறகு இதை ஒரு நாவல் என்று சொல்வதற்கு என்ன முகாந்திரம் என்று தெரியவில்லை...... (காலச்சுவடு - பக்கம் - 102)
என்று ஆரம்பிப்பதிலும் சரி-

.........இது சிவகதிரேசனின் தோல்வி மட்டுமல்ல தன்னையே அவனாகப்படைத்த நீலபத்மநாபனின் தோல்வியுமாகும்
என்று முடிப்பதிலும் சரி-

தேரோடும்வீதி நாவலை மட்டுமல்ல நீலபத்மநாபனையும் சேர்த்துத் தூரே எறிந்துவிடுகிற தோரணையை உங்களில் காணமுடிகிறது. உங்களின் சில கட்டுரைகளில் காணப்படுகிற விரிந்தபார்வை இதில் இல்லை என்றே தோன்றுகிறது. யாரோ சிலரின் தூண்டுதல் (தேரோடும் வீதியில் வருகிற பாத்திரங்களாகவும் இருக்கலாம்) உரக்கத்தொனிப்பதையே உணரமுடிகிறது.

.........இலக்கியத்தின் அடிப்படை உண்மை வாழ்க்கைதான் என்றாலும் உண்மைச் சம்பவங்களையும் மனிதர்களையும் பெயர்களை மாற்றி எழுதுவது சிறந்த படைப்பாகிவிடாது. அது சத்தியத்தின் தேடலோ உண்மை நாட்டமோ ஆகாது...... (கா. சு. - பக். 104, 105)
என்று கூறும் நீங்கள்-

உமாவரதராஜனின் உள்மனயாத்திரை சிறுகதைத்தொகுதியின் முன்னுரையில்

.........எனினும் மாலைசூட்டிகள், முகங்கள், ஜெனி, சூரியனின்முன்புறம், எலியம் ஆகிய ஐந்தும் இத்தொகுப்பிலுள்ள மிகச்சிறந்த படைப்புக்கள் என்பது எனது அபிப்பிராயம்...... .. (உ. யா. - பக் - 10 ல் 7)
எனவும்-

....... சமூகத்தில் ஊடுருவியுள்ள பொய்மையை, போலித்தனங்களை, முரண்களை, அவை அம்பலப் படுத்துகின்றன. அவற்றோடு ஒத்தோட மறுக்கும், அவற்றுக்கிடையே அகப்பட்டு நசுங்கும் மனிதஉள்ளத்தின் அவஸ்தையை உணர்த்துகின்றன......... (உ. ம. யா. - பக் - 10 ல் 7)
எனவும் கூறி-

........ தனக்குள்ளே யாத்திரை செய்து தன் அனுபவங்களை உணர்வுகளைக் கலையாக்குபவன் ஒரு நல்ல கலைஞன், உமாவரதராஜனும் இத்தகைய ஒரு கலைஞன்தான் ........ (உ ம. யா - பக் - 10 ல் 4)
என்று ஒரு சான்றிதழே வழங்கிவிடுகின்றீர்கள்.

உங்களுடைய மிகச்சிறந்த பட்டியலின் படைப்புகளில் வருகிற அனைத்துப் பாத்திரங்களுமே பெரும்பாலும் பெயர்மாற்றி எழுதப்பட்டவைதான். என் போன்ற வாசகர்களால் அப்பாத்திரங்கள் யார் யார் என அடையாளம் கண்டு கொள்ளமுடிந்தவைதான். உமாவரதராஜனின் எல்லா பாத்திரங்களும் பெரும்பாலும் அவ்வாறனவையே.

.........இலக்கியம் குறிப்பிட்ட நபர்களையும் அவர்களின் நடத்தைகளையும் பற்றிய பதிவு அல்ல அவற்றின் அடியாக அவற்றின் உள்ளே உறைந்துள்ள வாழ்வின் உண்மையை, தரிசனத்தை வெளிக்கொண்டு வரும் கலை முயற்சி அது ........ (கா. சு - பக் - 105)
என-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிக அழுத்தமாய்க் குரலெழுப்புகின்றீர்கள்.

உள்மனயாத்திரையில் வரும் கதைகள் அதிகபட்சம் குறிப்பிட்ட நபர்களையும் அவர்களின் நடத்தைகளையும் பற்றிய பதிவே. இந்நிலையில் உள்மனயாத்திரையில் அப்படி என்ன உண்மையைத் தரிசனத்தைக் கண்டீர்கள். தேரோடும்வீதியில் அவ்வாறான உண்மையும் தரிசனமும் ஏன் இல்லாமற் போனது என்பதில் குழப்பமுண்டு.

ஒருவர் மீதான பதிவைப் பிரமாண்டப்படுத்துவதற்கும் இன்னொருவர் மீதான பதிவைக்குலைப்பதற்கும் பிரயத்தனப்பட்டுள்ளீர்கள் போலவே தென்படுகிறது. ஒரேவகை பாத்திரவார்ப்புகள் மீதான உங்களின் அணுகுதல் இரட்டைத்தனம் மிக்கதாய் இப்போது உங்களுக்குப் படவில்லையா?

உள்மனயாத்திரை மீதான பார்வை சரி என வாதிடமுயல்வீர்களாயின் தேரோடும்வீதி மீதான உங்களின் பார்வை பிழையென்றாகிவிடும். தேரோடும்வீதி மீதான பார்வை சரியென வாதிக்க முயல்வீர்களாயின் உள்மனயாத்திரை மீதான பார்வை பிழையென்றாகிவிடும்.

இரண்டு பார்வைகளும் சரி என வாதிக்கமுயல்வீர்களாயின் உங்களின் பார்வையில்தான் எங்கோ கோளாறு உள்ளது என்றாகுமா?

பதிலை எதிர்பார்க்கும்

அன்புள்ள-

☐ *வியாபகன்*

## அபிப்பிராயங்கள்

பார்த்தவுடனேயே 'ஆகவே' இதழின் அட்டையும் அதன் அமைப்பும் மன நிறைவு தந்துவிடுகின்றன என்பது உண்மையே. அத்தகு மனநிறைவு உள்ளடக்கங்களால் ஏற்படவில்லை என்பது முண்மையே. காரணங்கள் கூறக்கூடுமாயினும் மறுபிரசுரங்கள் முதன்மை பெறுகின்றமை ஜீரணிக்கப்படமுடியாததே சமகால தமிழக எழுத்தாளருள் தமிழ்ச்செல்வன் குறிப்பிடத்தக்கவரேயாயினும புதிய படைப்புக்களைப் பெற்றிருக்க முடியாதா? ஈழத்தில் சிறுகதை, நாவல் என்பன தளர்ச்சியடைந்திருப்பினும் கவிதை வளர்ச்சியடைந்துள்ளது! மொழி பெயர்க்கும் ஆற்றலுடையவரும் காணப்படுகின்றனர். அத்தகையோரை அணுகியிருக்க முடியாதா? 'சிவப்புபலூன்' பாராட்டத்தக்க படைப்பு. நவீனஓவியம் பற்றிய இருகட்டுரைகளுங் கூட அத்தகையனவே. நவீனஓவியம் பற்றிய ஜபாரின் கட்டுரை தொடர்பாக, ஒரு விடயம் போர்க்காலச் சூழல் பல ஓவியர்களை இனங்காட்டியமைபற்றி அவர் அறியவில்லை; தரப்படும் பட்டியலும் முழுமை பெறவில்லை. 'தவளைச்சத்தம்' 'அண்ணாமலைகளுக்கும், டிப்ளோமாக்களுக்கும் சமர்ப்பணம்' என்பவை அவசியமற்றவை என்பது என் அபிப்பிராயம். செலவு நோக்கில் - சஞ்சிகையின் நீண்ட ஆயுள் கருதி - சாதாரண தாளில் அடித்திருக்கலாம் என்று தோன்றுகிறது! 'கசடதபற, 'அ ஆ இ' 'இனி' என்றெல்லாம் சஞ்சிகைகளுக்கு பெயரிட்டனர். அவற்றிற்குக் காரணம் கூறலாம். 'ஆகவே' என்பதற்கு என்ன காரணம் என வினவுகின்றனர் சகநண்பர்கள்.

*செ. யோகராசா - மட்டக்களப்பு*

... ....முழுக்க முழுக்க விமர்சனப்பாங்காகவல்லாது வேறுபடைப்புகளையும் சேர்த்தால் சஞ்சிகையின் மெருகு அதிகரிக்கும் என்பது எனது அபிப்பிராயம்.........

*வாசுகி ஜெயபாலன் - நோர்வே*

... ...வித்தியாசமான சஞ்சிகை பெயரைப் போலவே. அண்ணாமலைகளுக்கும் டிப்ளோமாக்களுக்கும் சமர்ப்பணம்' 'தவளைச்சத்தம்' போன்ற விசயங்களை அதிகரிப்பது சிறப்பானது.........

S.ஸ்ரீனிவாசன் - சென்னை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிரமிப்பூட்டும் ஓர் இசைக்கலைஞர்

உரையாடலை ஆரம்பிக்கும் போதிருந்த சாதாரண எதிர்பார்ப்பு மெல்லமெல்ல நொருங்கத்தொடங்கியது. சடுதியான பிரமிப்பு. அதற்கப்புறம் பெருமிதம். 'வாய்ப்புகள் கிடைத்தால் இளையராஜாவைப் பார்க்கிலும் மிகத்தரமான படைப்புகளை என்னால் தரமுடியும்' என வெகு நம்பிக்கையுடன் கூறும் இசையமைப்பாளர் திருமலை பத்மநாதனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தது.

கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மேற்கைத்தேய இசை, எனப் பாகுபடுத்துவதைக் கூடப் பொறுத்துக் கொள்ளாத இவர், மொட்டைத்தலை, காவியுடை, உருத்திராட்ச மாலை, குளிரூட்டப்பட்ட தியான அறை தலைக்கனம் இவைகளுடன் காலம் கடத்துகிற சில இசையமைப்பாளர்களில் இருந்தும் அதிகபட்சம் வேறுபட்டு இசைதொடர்பான நிறைய நூல்கள், நிறையக்கனவுகள், நிறையமுயற்சிகள் இவைகளுடன் வாழ்ந்து வருகிற ஒரு மனிதர்.

1964ம் ஆண்டு தனது 22வது வயதில் 'திருக்கோணமலை இசைக்கழகம்' என்னும் பெயரில் ஒரு குழுவை உருவாக்கினார். திருக்கோணமலைக் கவிராயர் தா. சி. வில்வராஜா எழுதிய 'மயிலேறும் திருக்குமரா' என்ற முருகன் பாடலுக்கு கர்நாடக ராகமாகிய பூபாளத்தில் முதன் முதலாக இசையமைத்த இவரின் 16 பாடல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இன்னும் வெளியிடப்படாத 250ற்கு மேற்பட்ட மெட்டுக்கள் தன்னிடம் உள்ளதாக கூறும் இவர் இலங்கைத்தமிழ் திரைப்படங்களான 'நிர்மலா' 'தென்றலும் புயலும்' போன்றவற்றிற்கும் இசையமைத்துள்ளார்.

1966ம் ஆண்டு 'சிரிப்பு மன்றம்' தொடங்கப்பட்டு பல நிகழ்ச்சிகள் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்த்தப்பட்டன. அதில் திருக்கோணமலை இசைக்கழகம் ஒருமணிநேர நிகழ்ச்சியை வழங்கியது. இவர்களின் திறமையைக் கண்ட தயாரிப்பாளர் ஏ. ரகுநாதன் நிர்மலா படத்திற்கு இசையமைக்க ஒப்பந்தம் செய்தார்.

கனவிலாடும் மலரே......, கண்மணி ஆடவா ....., நுரைபெருகும்......, மூங்கில் இலை மேலே ..... என ஆரம்பிக்கும் நிர்மலா திரைப்படப் பாடல்களையும் இயற்கைமகள் எழுதும்...... சந்திரவதனத்தில்...... அரும்பான...... துணை தேடி வந்ததோர்பறவை ..... அவள் தானா...... போன்ற தென்றலும் புயலும் திரைப் படப் பாடல்களையும் கேட்டு ரசித்திருக்கிறோம். இப்போதும் கூட கண்மணிஆடவா......, துணைதேடி வந்ததோர் பறவை ..... போன்ற இரண்டு பாடல்களையும் மறக்காத, உச்சரிக்காத இசை ரசிகர்கள் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம்.

உரையாடலின் போது இவரிடம் உங்களுக்குப் பிடித்த இலங்கை இசையமைப்பாளர் யார்?எனக் கேட்ட போது காலம் சென்ற திரு. றொக்சாமியைக் குறிப்பிட்டு நான் அவரின் இசையமைப்பை விரும்புவதற்கு மாறுபட்ட காரணம் ஒன்றுண்டு. ஒரு பாடலுக்கு இசையமைப்பதுதான் முக்கியம் என்று நான் கருதவில்லை. ஹார்மனி, கௌண்டமெலடி போன்ற விடயங்கள் மிக முக்கியமானவை. அந்த விடயத்தில் றொக்சாமியின் அறிவும், கற்பனை வளமும் அதிசயிக்க தக்கவை. தென்றலும் புயலும் திரைப்படத்திற்கு இசையமைத்த போது நான் செய்த பல விடயங்களை அவர் போற்றினார். சில இடங்களில் 'இப்படிப் போடுவோமே' என்று கூறி அதை வாசித்தபோது நான் மெய்மறந்ததும் உண்டு. உதாரணமாக தென்றலும் புயலும் படத்தில் இடம் பெற்ற துணைதேடிவந்ததோர்பறவை என்ற பாடலுக்கு சரணத்தில் அவர் குறிப்பிட்ட ஹார்மனி மிகவும் அற்புதமானது. விடயம் தெரிந்தவர்களிடம் பொறாமை நிச்சயம் இராது. றொக்சாமியும் மிகவும் உயர்ந்த உள்ளம் கொண்டவர். இலங்கையின் இசைத்துறையில் திறமை மிக்கவர்களில் ஒருவர். அவர் செய்த மிகப் பெரியபாவம் தமிழனாகப் பிறந்ததென்றே நான் நினைக்கின்றேன்.'' என சற்று சலிப்புடன் நினைவு கூர்ந்தார்.

''இலங்கை மெல்லிசைப்பாடல்கள் முற்றிலும் இந்திய திரைப்படப் பாடல்களிலிருந்து மாறுபட்டதென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டும். தென் இந்தியர்கள் எமது மெல்லிசைப் பாடல்களில் மிகவும் விருப்பம் கொண்டவர்கள். 1980ம் ஆண்டிற்குப் பின்னரே இந்திய திரைப்படப் பாடல்களின் தாக்கம் ஏற்பட்டது. முக்கியமாக இளையராஜா பாணியைப் பின்பற்றி மோகன்ராஜ் இசையமைக்கத் தொடங்கியதிலிருந்து என்பது குறிப்பிடத்தக்கது'' இலங்கை மெல்லிசைப்பாடல்கள் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்குனர் தாசீசியசின் வேண்டுகோளுக்கிணங்க மகாகவியின் புதியதொருவீடுநாடகத்தில் இடம் பெற்ற பாடல் களுக்கு இசையமைப்பாளர் திருமலை பத்மநாதன் புதுப்பொலிவு வழங்கினார் என்பதும் முக்கியமான ஒரு விடயம்.

பிரச்சாரம் செய்யப் புறப்படும் கலை தனது முழுமையையும் வீரியத்தையும் இழந்து விடுகிறது எனக்கூறிக் கலையை ஆழ்ந்த ஆன்மீகத்தினூடாக அணுகும் இவர், மொஸார்ட், பாக்ஹ், வாக்னர், மென்டல்ஸன், பீத்தோவன், ரவிசங்கர் போன்ற இசைமேதைகளின் படைப்புகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர். சர்வதேச தரத்திலான ஒரு படைப்பை உருவாக்கும் முயற்சியிலும் தேடலிலும் தற்போது ஈடுபட்டு வருகிறார். அவரின் முயற்சி முழுமைபெற வாழ்த்துவோம்.

இவ்வளவு திறமைமிக்க ஒரு கலைஞனை முழுமையாகப் பயன்படுத்தத் தவறியிருப்பது வருத்தத்துக்குரிய விடயம். தொடர்புடைய துறைகள் இவர் புறக்கணிக்கப்படாமல் இருப்பதில் கவனம் செலுத்த முன்வரவேண்டும். அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வரும்போது என்னையறியாமலேயே 'கண்மணிஆடவா' என்ற பாடலை வாய்முணுமுணுக்கத் தொடங்கியது.

☐ ஜபார்


# ஆகவே

இருமாத இதழ்

**விரும்பிப் படிப்பவர்களுக்கான வெளியீடு**

தபால்செலவு உள்ளிட்ட அன்பளிப்பு
தனிப்பிரதி - 20 ரூபா
ஆண்டுக்கு - 100 ரூபா

**எல்லாவகையான தொடர்புகளுக்கும்**

*M I. A. JABBAR*
*71, Rajawarodhayam Road*
*Trincomalee*
*Sri Lanka*

படைப்புகளுக்கு உரியவர்கள் பொறுப்பு
சரியான கருத்துக்களுடன் எமக்கும் உடன்பாடு உண்டு

ஆகவே




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உபதேசம்

இது பசி இது விரகம்
இது வறுமை இது சுரண்டல்
இது காயம் இது இரத்தம்
இது துப்பாக்கி இது மரணம்
இது துயரம் இது கண்ணீர்
இது விரக்தி இது தற்கொலை
இது அவஸ்தை இது போராட்டம்
இது வெளி இது விசும்பு
இது கடல் இது மழை
இது வெளிச்சம் இது பனித்துளி
இது பறவை இது பாட்டு
இது காற்று இது மூச்சு
சலித்து சோர்வுற்று
சாகலாம் போலிருக்கிறதா
மூதேவி
வாழ்க்கை உனக்குப்
புரியப் போவதில்லை
போ.

## ஐயோ கடவுளே

எனது ஆதியில்
கடவுள் எங்கோ இருந்தார்
விதம் விதமாய்
மனதுள் தோற்றம் காட்டி
எங்கோதான் இருந்தார்
பின்
எங்கும் இருப்பதாகப் புலப்பட்டு
சமீபமாகி
எனக்குள்ளேயும் இருந்தார்
என்னுடையவராகவேதான்
இவரின் தொடக்கம் என
உணரத்தலைப்பட்டபின்
இவரே இல்லாமலேயே
இருக்கிறார்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முழுமை

கால் எது?
தலை எது?
இடை நடுவில் தொடங்கி
இடை நடுவில் முடிந்து போகிறது
தொடங்கியதற்கு முன்னரும்
முடிந்து போனதற்குப் பின்னரும்
இன்னுமுண்டு
பின்—
காலேது!
தலையேது!

## உணரப்படும்கணம்

முடிவற்ற இழையெனஊரும் பாதையில்
வண்டி புறப்பட்டு விரைகிறது
எரிபொருள் நெடியில் குமட்டும் வயிறு
தூசுப்படலம்—
கண்கரிப்பும் தும்மலும் சல்ல்ல்லிப்பு
அஜாக்கிரதையில்
எலும்பு மூட்டுகள் விலகிப்போகும்
கரடுமுரடாய் மேடுபள்ளம்
மேகம் ஓடிப்போகும்
இலையுள்ள மரமும்
இலையற்ற மரமும்தான்
கூட
இருள் ஒளி வெயில் நிழல்
முன்புறக் கண்ணாடி மீது
சராலென விழுந்து எம்பமுடியாது
அலைக்கழிக்கப்படும் பட்டாம்பூச்சி
திருப்பத்தில்-
இறக்கையின் சிறுதுண்டிழந்து
தன்பாட்டில் பறப்பு
மின்னல்!
துயரில் அமிழ்ந்து எதிர்கொள்ளத்
தானே நெறிப்படுகிறதாக்கும்
வாழ்க்கை.

☐ ஜபார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வேண்டுதல்

உன்னைச் சுட்டெரிப்பதாய் நீ உணரும்போது
நான் முறைப்புடன் பார்க்கவில்லை
பற்களை நறநறவென்று கடிப்பதையும்
முஷ்டியை ஓங்கி தரையின்மீது
அடிக்கடி குத்திக்கொள்வதையும்
இனி இருட்டிலேயே வைத்துக்கொள்கிறேன்
உனது செவிகளும் கிரகிக்கமுடியாதபடி
உன்னைப்பற்றி ஒரு வார்த்தையேனும்
நான் உச்சரிக்கப் போவதில்லை
மௌனம் கொள்வேன்
என்மௌனம் புயலாக – எதுவாகவேனும் மாறும்வரை
மௌனம் கொள்வேன்
ஆயினும்...
என்னை ஆட்கொண்டு அழுத்தும் கண்ணீர்
கரைவதாய் நான் உணர
என் வேதனை சொட்டுச் சொட்டாய்
தீர்ந்து கொண்டிருப்பதாய் நான் உணர
ஒரு கணமேனும் அழவிடு
என்னை
கதறிக்கதறி கதறிக்கதறி
அழவிடு.

☐ *கிறிஸ்டின்*

---

### அபிப்பிராயங்கள்

........தனியே ஒரு சில விசயங்கள் என இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக பல விசயங்களை வெளியிட முயற்சித்திருப்பது பாராட்டுக்குரிய விசயம்தான். என்றாலும் கடைசியில் இலக்கியத்தில் மட்டுமே வந்துசேரும் என்று நான் நினைக்கிறேன்.........

*ச. கிரிதரன் - ஐக்கியஇராச்சியம்*

.........ஆகவே அழகாகவே வெளியிடப்பட்டுள்ளது. நவீனஓவியம் பற்றிய நல்ல குறிப்புகளுடன் வெளிவந்துள்ள ஆகவே தொடர்ந்து வந்தால் தனக்கென ஓர் இடத்தைப் பிடிக்கும். பாராட்டுக்கள்.........

*மு. பொன்னம்பலம் - புங்குடுதீவு*

---

'ஆகவே' எந்தவொரு வாய்ப்பாடுகளுக்குள்ளும் தன்னை சிறைப்படுத்திக்கொள்ளாது அவ்வப்போதைய கலை இலக்கியப் போக்குகளை உள்வாங்கி நகரும். நடப்பு நிகழ்வுகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் ஆகவேயின் வருகையில் தாமதம் ஏற்படுகிறது. எனவே ஆகவேயில் தொடராக வெளியிட உத்தேசித்த 'விளையாட்டுப்பகுதி' தவிர்க்கப்படுவதற்காக வருத்தப்பட நேர்கிறது.

www.tamilarangam.net


## WELCOME

''சொல்லும் செயலும் சிந்தனையும் தாய்மொழிமூலம் செயற்படும்போது விடுதலையின் முதற்கதவு திறக்கப்படுகிறது''

''தங்கள் தங்களுடைய தேசிய, கலை, கலாசராத்திற்கு தனிமதிப்பளிக்கும் ஒரு அரசியலமைப்புக்கு மாத்திரம்தான் ஆதரவளிக்க வேண்டும். இதில்தான் எங்களுடைய முழுச்சுதந்திரமும் தங்கியிருக்கின்றது.''

– ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா –

**BUILDERS**

**&**

**GENERAL CONTRACTORS**

# R. RAVICHANDRAMOHAN COMPANY (PVT) LTD.

71, Thirugnanasampanthar Street

Trincomalee

22046


# ஆகவே


அச்சகம்: விஸ்டம் - திருமலை.

வெளியீடு: ஆகவே கலாச்சார அமைப்பு

ஆசிரியர்: மு. இ. அ. ஜபார்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்